| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **41/2009** |
| **தேதி** | **:** | **11.03.2025** |
| **பெயர்** | **:** | **நாகலிங்கம் த/பெ சின்னையன்** |

**வா.த.சா.1. /(PW1)** திரு. நாகலிங்கம் த/பெ சின்னையன் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.த.சா.1 (PW1) - குறுக்கு விசாரணை**

1) நான் மாங்காடு, தென்காலனி என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கோவூரில் உள்ளது. தாவா 'அ' அட்டவணை சொத்தின் புல எண் 79/1B1 மற்றும் விஸ்தீரணம் 87 சென்ட் ஆகும். தாவா 'பி' அட்டவணை சொத்தின் புல 80/1A2 மற்றும் அதன் விஸ்தீரணம் 6 சென்ட் ஆகும். தாவா 'அ' அட்டவணை சொத்தின் வடக்கும் பக்கம் ஏரிக்கால்வாய் உள்ளது என்றால் சரிதான். தெற்கு பக்கம் பிரதிவாதியின் நிலம் அமைந்துள்ள புல எண் 79/1B2 அதன் விஸ்தீரணம் இரண்டரை சென்ட் என்றால் சரிதான்.

2) தாவா 'அ' அட்டவணை சொத்தின் மேற்கு பக்கம் புல எண் 79/1A1 & 79/1A2 ல் 87 சென்ட் நிலம் உள்ளது. மேற்படி நிலத்தை முன்பு முனுசாமி என்பவர் வாங்கினார். அதன் பின்னர் கொலப்பாக்கத்தை சேர்ந்த ஒரு நபருக்கு விற்றுவிட்டார். பெயர் ஞாபகம் இல்லை. தாவா 'பி' அட்டவணை சொத்தின் வடக்கு பக்கம் கொலப்பாக்கத்தை சேர்ந்த நபரின் இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா 'பி' அட்டவணை சொத்தின் கிழக்கு பக்கம் பிரதிவாதியின் நிலம் அதன் புல எண் 80/1A1 & 80/1A1A1 உள்ளது என்றால் சரிதான்.

3) தாவா 'பி' அட்டவணை சொத்தின் மேற்கு பக்கம் கொலப்பாக்கத்தை சேர்ந்த ஒரு நபரின் நிலம் உள்ளது. தாவா 'பி' அட்டவணை சொத்தின் தெற்கு பக்கம் யாருடை நிலம் உள்ளது என்றால் பிரதிவாதியின் நிலம் உள்ளது. நீதிமன்றத்தில் இருந்து வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்தாரா என்றால் சரிதான். **என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் ஆணையரின் அறிக்கை நீ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4) வழக்கறிஞர் ஆணையர் நிலஅளவையர் மூலம் என்னுடைய நிலத்தையும் பிரதிவாதியின் நிலத்தையும் கிராம கணக்கு படி அளந்தார் எனற்றால் சரிதான். என்னுடைய நிலத்தையும் பிரதிவாதியின் நிலத்தையும் தனித்தனியாக அளந்து நிலஅளவையர் குச்சி நட்டார் என்றால் சரிதான். இவ்வழக்கில் எனது வழக்குரையில் தாக்கல் செய்துள்ள தாவா 'அ' அட்டவணை சொத்தின் ஐக்குபந்தி விவரத்தில் தாவா 'அ' அட்டவணை சொத்தின் தெற்கு பக்கம் மோகனசுந்தரம் என்பவரின் நிலம் உள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மோகனசுந்தரம் என்பவரிடம் இருந்து தான் பிரதிவாதியும் நானும் சொத்துக்களை வாங்கினோம். தற்போது தாவா 'அ' அட்டவணை சொத்தின் தெற்கு பக்கத்தில் பிரதிவாதியின் நிலம் தான் உள்ளது.

5) தாவா 'அ' அட்டவணை சொத்தின் மேற்கு பகுதியில் தான் புல எண் 79/1A1 & 79/1A2 நிலம் அமைந்துள்ளது என்றாலும் நான் எனது வழக்குரையில் தாவா 'அ' அட்டவணை சொத்து விவரத்தில் ஐக்பந்தியில் புல எண் 79/1A1 & 79/1A2 நிலம் கிழக்கு பக்கம் அமைந்துள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புல எண் 79/1A1 & 79/1A2 நிலம் தாவா அ அட்டவணை சொத்திற்கு மேற்கு பக்கம் தான் உள்ளது.

6) எனது வழக்குரையில் தாவா 'அ' அட்டவணை சொத்து விவரத்தில் ஐக்பந்தியில் புல எண் 79/1C1 & 79/1D பிரதிவாதிக்கு சொந்தமான நிலம் மேற்கு பக்கம் அமைந்துள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் மேற்படி புல எண் 79/1C1 & 79/1D பிரதிவாதிக்கு சொந்தமான நிலம் தாவா 'அ' அட்டவணை சொத்திற்கு கிழக்கும் பக்கம் உள்ளது என்றால் சரிதான்.

7) எனது வழக்குரையில் தாவா 'பி' அட்டவணை சொத்து விவரத்தில் ஐக்பந்தியில் வடக்கு பக்கத்தில் பிலதிவாதியின் நிலம் உள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் தாவா 'பி' அட்டவணை சொத்திற்கு வடக்கு பக்கம் கொலப்பாக்கத்தை சேர்ந்தவரின் நிலத்தின் புல எண் 79/1A2 உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் தெற்கு பக்கத்தில் தாவா 'பி' அட்டவணை சொத்து விவரத்தில் ஐக்பந்தியில் தெற்கு பக்கத்தில் எனது நிலம் இருப்பதா தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தாவா 'பி' அட்டவணை சொத்து விவரத்தின் தெற்கு பக்கத்தில் பிரதிவாதியின் நிலம் தான் உள்ளது என்றால் சரிதான்.

8) எனது வழக்குரையில் தாவா 'பி' அட்டவணை சொத்து விவரத்தில் ஜக்பந்தியில் கிழக்கு பக்கத்தில் மோகன் என்பவரின் நிலம் இருப்பதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் தாவா பி அட்டவணை சொத்தின் கிழக்கு பக்கத்தில் பிரதிவாதியின் நிலத்தின் புல எண் 80/1A1 & 80/1A1A1 தான் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா 'பி' அட்டவணை சொத்து விவரத்தில் ஜக்பந்தியில் மேற்கு பக்கத்தில் பிரதிவாதியின் நிலம் உள்ளது என்று தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் ஆனால் உண்மையயில் தாவா பி அட்டவணை சொத்தின் மேற்கு பக்கத்தில் மோகன் என்பவரது நிலம் உள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய சொத்தின் ஜக்குபந்தியை வழக்குரையில் வேண்டும் என்றே தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யும் முன்னர் ஜக்குபந்தி விவரங்களை சரியாக பார்க்கவில்லை.

9) தாவா 'அ' அட்டவணை சொத்தை யார் கிரயம் வாங்கினார் என்றால் எனது தந்தை 1969 ம் ஆண்டு வாதசாஆ 1 கிரயம் பதத்திரம் மூலம் வாங்கினார். எனது தந்தை எப்போது இறந்தார் என்றால் 2001 ம் ஆண்டு இறந்தார். எனது தந்தைக்கு வாரிசுகள் யார் என்றால் எனது தாயார் மற்றும் நான் மட்டும் தான். எனது தாயார் இறந்துவிட்டார். எனது தாயார் 2003 ம் ஆண்டு எனக்கு வாதசாஅ 2 தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார். வாதசாஆ 3 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும், எனது தாய் பெயரிலும் உள்ளது. வாதசாஅ 3 பட்டா தாவா 'அ' அட்டவணை மற்றம் தாவா 'பி' அட்டவணை சொத்து சம்பந்தப்பட்டது என்றால் சரிதான்.

10) வாதசாஆ 4 அடங்கல் மற்றம் சிட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரிலும், எனது தாய் பெயரிலும் உள்ளது. வாதசாஆ 3 பட்டா புல எண் 79/1B1 ல் 34ஏர் விஸ்தீரணத்திற்காக பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். வாதசாஆ 3 பட்டா புல எண் 80/1A2 ல் 1 ஏர்க்காக பட்டா தாக்கலாகியுள்ளது என்றால் சரிதான். கிராம கணக்கு படி நில அளவையர் மூலம் வழக்கறிஞர் ஆணையர் வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்து அவர் அவர்களது அனுபவத்தில் உள்ளது என்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

11) தாவா 'பி' அட்டவணை சொத்து விஸ்தீரணம் 6 சென்ட் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது தந்தை கிரயம்

வாங்கினார். அது சம்பந்தப்பட்ட கிரயப்பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி தாவா பி அட்டவணை சொத்து எனக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க வாதசாஆ 3 பட்டா மட்டும் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கூறுவது போல் தாவா பி அட்டவணை சொத்து எனது தந்தை வாங்கவில்லை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

12) நான் சொல்வது போன்று பிரதிவாதி எனது சொத்தில் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனவே பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. 2009 ம் ஆண்டு 30 அடி எனது சொத்தினுள் வந்து கல் வைத்தார். அதன் பின்னர் நான் இவ்வழக்கை தாக்கல் செய்த பின்னர் தாவா அ அட்டவணை சொத்து காலி மனையாக தான் உள்ளது.

13) பிரதிவாதி தாவா அ அட்டவணை சொத்தில் எவ்வளவு தூரம் ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் 30 அடி அகலம் சுமார் 150 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்தார். பிரதிவாதி எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததால் ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் பிரதிவாதி இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னர் எனது நிலத்தில் போட்ட கல் அப்படியே தான் உள்ளது. அது மழையால் மூடப்பட்டுள்ளது. தற்போது தாவா அ அட்டவணை காலி மனையாக தான் உள்ளது. யாரும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை.

14) வழக்கிறஞர் ஆணையர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அறிக்கைக்கு நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் ஆட்சேபனை செய்தேன். நான் கூறுவது போல் நான் நீதிமன்றத்தில் எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது குறித்து எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதி எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், நான் இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எனது நிலத்தில் கல் போட்டதால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன். பிரதிவாதி எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்பதை நிருபிக்க ஆதாரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதனால் தான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

தாவா அ அட்டவணை மற்றும் தாவா பி அட்டவணை சொத்து யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் எனது கட்டுப்பாட்டில் உள்ளது.

**குறுக்கு விசாரணை :**

பிரதிவாதிகளின் நிலம் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளது என்றால் சரிதான்.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. I. Vino,
District Munsif,
Sriperumbudur.